# வளர்நிலை - 5

## காடு

ஒரு நாட்டின் வளம் காட்டுவளத்தைப் பொறுத்தே அமையும் என்பர்.
**காடு செழித்தால், நாடு செழிக்கும்** என்பது பழமொழி.

பெருங்காடு, குறுங்காடு, பொச்சைக்காடு, அரைப்பசுங்காடு, உலர்காடு, சதுப்பு நிலக்காடு, புல்வெளிக்காடு எனக் காடுகள் பல வகைப்படும். காடுகளில் பல்வேறு வகையான மரங்கள் நிறைந்திருக்கும். காடுகள் நிறைந்த பகுதியை நம் முன்னோர்கள் '**முல்லை நிலம்**' என வழங்கினர்.

ஒரு நாட்டின் பரப்பளவில் மூன்றில் ஒரு பங்கு காடாய் இருத்தல் நலம். ஆனால், நம் நாடுகளில் குறைந்த பரப்பளவிலேயே காடுகள் உள்ளன. பெருகிவரும் மக்கள் தொகையின் காரணமாய்க் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

அடர்ந்த காடுகளில் யானை, சிங்கம், புலி, மான் முதலான விலங்குகள் வாழ்கின்றன; பல்வேறு வகையான பறவைகளும் வாழ்கின்றன. நோய் தீர்க்கும் மூலிகைகள் காடுகளில் கிடைக்கின்றன. மரங்கள், காற்றில் உள்ள மாசைத் தூய்மைப்படுத்துகின்றன; தட்பவெப்ப நிலையைச் சமப்படுத்துகின்றன. காடுகள், மக்கள் பயன்பாட்டிற்குத் தேவையான மரங்களைத் தருகின்றன.

காடுகள் இல்லையெனில் மழைவளம் இல்லை. மழை வளம் இல்லையெனில் உயிரினங்கள் அனைத்தும் அழியும். மக்களின் பேராசையும் சுயநலமுந்தான் காடுகள் அழியக் காரணம் எனலாம். 'காடுகளை அழித்தால் நாடுகள் அழியும்' என்பதை உணர்தல் வேண்டும்.
.மண்வளம் காக்கவும், மழைவளம் பெருகவும், தொழில் வளம் சிறக்கவும், உயிரினம் வாழவும் காடுகளைப் பாதுகாப்போம்.
நன்றி வணக்கம்!